ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

ஆர்யதர்மம் தினசரிப் பத்திரிகையாகுமா?

(50000, ரூபாய் தேவை)

இவ்விந்தியாவிலுள்ள ஸமாசாரபத்திரிகைகளெல்லாம் ஸநாதந தர்மிகளுக்குப் பிரயோஜனப்படவில்லை. அவை நவீன சீர்திருத்தக்காரர்களுக்குத்தான் சொந்தம். அதில் ஸநாதநதர்ம விஷயங்கள் குறைத்தும் மறைத்துந்தான் பிரசுரிக்கப்படுகின்றன. சில ஸந்தர்ப்பங்களில் பொய்யை மெய்யென்று நினைக்கும்படி அவற்றில் விஷயங்கள் வெளியாகின்றன. பொய்யைத் தெரிந்துகொள்வதற்காகத்தான் அவைகளை நாம் வாங்கி வாசிக்கவேண்டும். பொய்யைத் தெரிந்துகொள்ள எவ்வளவு பணம் செலவழிக்கிறோம். பணமிருந்தால் அதை உபயோகப்படுத்தவேண்டிய முறையில் உபயோகப்படுத்தினால்தான் பகவான் மேன்மேலும் பணத்தைக் கொடுத்து அருள் புரிவார். இல்லாவிடில் இருள்வாழ்க்கைத்தானேற்படும். ஹிந்து மத விரோதிகளான பத்திரிகைகளை வாங்கி வாசித்து மோசம்போவது மிக ஏளனம். சன்மார்க்கப்போதகப் பத்திரிகையையே வாங்கி வாசியுங்கள். இந்த சமயம் நமது ஸமயப் பிரசாரஞ் செய்வதற்காகத் தினசரிப் பத்திரிகை ஒன்றாவது அவச்யமிருக்கவேண்டும். அதில் ஹிந்துமத உண்மையை உலகமெங்கும் பரவும்படி செய்யவேண்டும். புதிய கட்டடங்கட்டுவதைக்காட்டிலுமிருப்பதைப் பலப்படுத்துவதுதானுசிதம். ஸுலபமுமாகும். ஆகவே இவ்வார்யதர்மத்தைத் தினசரிப் பதிப்பாக மாற்றிக்கொள்வது ஸுலபம். இவ்விதம் வேலை செய்ய பணம் தேவை. பணம் பலரிடமிருக்கிறது. ஸ்ரீமான்களைத் தட்டி எழுப்பி முன்னுக்குவரச் செய்யவேண்டும். ஹிந்துமதாபிவிருத்தி இவர்களால் ஏற்படவேண்டும். இத் தென்னாட்டில் (50) கனவான்கள் ஒன்றுகூடி மனது வைத்தால் 50000, ரூபாய் கிடைப்பது துர்லபமல்ல. ஹிந்துமதந்தான் தாய் மதம். அவளைப் போஷித்தால் அவளுடைய பாலைப் பருகி நாம் சுகமாக வாழலாம். இவ்விதமே கொஞ்சகாலமிருப்போமானால் "ஹிந்து" என்ற பெயரும் மறைந்துபோகும். சீர்திருத்தக்காரர்களைப் போல் நாமும் போலியாக நடித்துக்காட்டும் காலமிதுவல்ல. ஆகையால் ஆர்யதர்மத்தைத் தினப்பதிப்பாகச் செய்யத் தங்களாலியன்றவளவு பண உதவி செய்யுங்கள். உங்களது ஆர்யதர்மாபிமானம் செய்கையால் வெளிவரவேண்டும். பலர் உதவிசெய்ய முன்வந்தால் இந்திய சாஸ்திரமும் இந்துமதமும், இந்தியர் பெருமையும் மேலோங்கும். சிறு துரும்பும் கயிறாகத் திரிக்கப்பெற்றால் மதங்கொண்ட யானையையும் கட்டலாம் என்பதை மறக்காதீர்கள். தமது கடைமையை மறந்தால் கஷ்டந்தான்வரும். மற்ற செலவை செட்டுப்பண்ணிக்கொண்டு ஆர்ய தர்மத்தை அபிவிருத்தியடையும்படி உதவிபுரிய பகவான் நற்புத்தி புகட்டுவாராக. சுபம்.

V. J. S.

ஆர்ய தர்மம்.

ஆங்கிரஸ-ஹூ ஐப்பசி-மீ கஅஉ

இந்துமதம் என்பது யாது?

இந்துமதம் பிரபஞ்சமுழுவதும் பரவியிருந்ததற்கு அடையாளங்கள்.

ஸ்ரீ ஜகத்குரு ஆச்சாரியஸ்வாமிகளின் விளக்கம்.

சென்ற புதனன்றிரவு சின்னாட்களாய் மயிலாப்பூர் சம்ஸ்கிருதகலாசாலையில் எழுந்தருளியிருக்கும் காஞ்சி காமகோடி பீடாதிபதிஜகத்குரு ஸ்ரீமத் சங்கராசாரியஸ்வாமிகள் "நமதுமதம்" என்கிற விஷயமாய் ஓர் அரிய உபந்யாசம் செய்தார். அதன் ஸாரம் பின் வருமாறு:—

உலக மதங்கள்.

உலகத்தில் ஏற்பட்டுள்ள மதங்கள் எல்லாம் ஒவ்வொரு மனிதர் பெயரைக் கொண்டவையாக இருக்கின்றன. அம் மனிதர் பெரிய ஞானியாயும், உலகில் பெரிய சிரேஷ்டராயு மிருந்திருக்கலாம். தற்போது பெரிய மதங்களாய் விளங்கும் கிறிஸ்தவமதம், முகமதிய மதம், பௌத்தமதம், ஜைனமதம், இவையாவும் அதனை ஸ்தாபித்த பெரியவர் பெயரையே கொண்டிருக்கின்றன. ஸௌராஸ்டர் ஸ்தாபித்த பாரசிகர் மதமும் அவர் பெயரையே பெற்று விளங்குகிறது. சீனத்துமதமாகிய கன்பூஷிய மதமும் கன்பூஷ்யஸ் என்னும் பெரியவர் பெயரைக் கொண்டே உலவிவருகிறது.

பேரில்லாத மதம்.

ஆனால் நாமெல்லோரும் எந்த மதத்தை யனுஷ்டிக்கிறோம் என்று கேட்டால் அந்த மதத்திற்கு மட்டும் ஒரு பெயர் இல்லை. ஏதோ இங்கிலீஷ் படிப்பால் ஒரு பெயர் ஏற்பட்டிருக்கிறது. அது

வும் இரண்டு மூன்று தலைமுறையாக ஏற்பட்டதுதான். ஹிந்து மதம் என்று கூறுவார்கள். இந்தப் பெயர் அதற்குத் தானாகவோ அல்லது கீழே சொன்னபடி ஒரு பெரியவரின் பெயரைத் தழுவியோ ஏற்படவில்லை. ஏதோ "ஸிந்து" நதிக்கு அப்பால் உள்ளவர்களெல்லோரும் ஹிந்துக்கள், அவர்கள் வழிபடும் மதம் ஹிந்து மதம் என்று நம் நாட்டிற்குப் புறம்பே உள்ளவர்கள் கொடுத்த பேர்தான் அது. இப்பவும் வடக்கேயிருந்துவருபவர்களையெல்லாம் நாம் வடக்கித்திக்காசி பிராம்மணன் என்று சொல்லுகிறோமல்லவா? அவர் காஷ்மீரத்திலிருந்து வந்தாலும் வங்காளத்திலிருந்து வந்தாலும் எல்லோரையும் தக்ஷிண பூமியிலுள்ள நாம் ஒரே பெயர் வைத்துச்சொல்லுவது சகஜமாயிருக்கிறது. இன்னும் மலையாளத்திலிருப்பவர்கள் மலையாள எல்லை தாண்டியுள்ள பிரதேசத்திலுள்ளவர்களையெல்லாம் ஏகதேசமாய்க் கொங்கணிகள் என்று கூறி விடுவார்கள். ஏனெனில் மலையாளத்தையொட்டி அடுத்த பிரதேசம் கொங்கணி நாடு. அதேமாதிரி தங்கள் எல்லையிலுள்ள ஸிந்துநதி தீரத்திற்குக் கிழ்ப்புறமுள்ளவர்கள் அனைவரும் "ஸிந்துக்கள்" "ஹிந்துக்கள்" ஹிந்துமதத்தினர் என்று பிறரால் நமக்குப் பெயர் வழங்கப்பட்டது. எனவே உண்மையில் நமது மதத்திற்கு ஒரு பேரும் ஆதியில் காணவில்லை. மற்ற மதங்களைப்போல் இதை ஸ்தாபித்தவர் எவர், அவர் எந்த நூற்றாண்டில் இருந்தார், எவ்வளவு நூற்றாண்டுகளாக இம் மதம் நிலவிவருகிறது என்று வரையறுப்பது சாத்தியமில்லை. அதுவே நமது மதத்தின் பெருமை. ஆகவே நமது மதத்திற்கு ஒரு பேர் இல்லாமற்போய்விட்டதே என்று நான் வருத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக நான் சந்தோஷப்படுகிறேன்.

மதக்குறி அல்லது சின்னம்.

ஒரு பேருமில்லாத இந்தப் பெரிய மதத்திற்கு ஏதேனும் ஒரு அடையாளம், சின்னம், அதாவது குறியாவது இருக்கிறதா என்று ஆராய்வோம். அதுவும் நமக்குக் கஷ்டமாகத்தானிருக்கிறது. கிருஸ்தவர்களுக்குச் சிலுவை ஒரு சின்னமாக விளங்குகிறது. இவ்வாறே பிற மதஸ்தர்களுக்கும் ஒரு சின்னம் இருந்தே வருகிறது. நம்மவர்களுக்கு எது சின்னம்? முன்காலத்தவர்களைக் கேட்டால் சிகை உண்டு என்பார்கள். இங்கே கூடியிருக்கும்

இந்தப் பெரிய கூட்டத்தில் எவ்வளவுபேருக்கு அது இருக்கிறது என்று நீங்களே காண்கிறீர்கள். (சிரிப்பு) ஆகவே ஹிந்துக்களுக்குத் தற்போது சிகையை ஓர் சின்னமாகச் சொல்லமுடியாது. பின்னர் எதைத்தான் நாம் அடையாளம் காட்டலாம். நெற்றி நாமத்தையோ, விபூதியையோ, கோபிச்சந்தனத்தையோ காட்டலாமோ? இதுவும் ஒருவழிப்பட்ட ஒரு தனிக்குறியாகவில்லை. சில நாளைக்கு முன் நான் படித்த ஒரு நூலில் ஹிந்துக்களை காது குத்தப்பட்டவர்கள் என்று குறிப்பிட்டிருந்தது என் நினைவுக்கு வருகிறது. காது குத்துவது நமக்கு நினைவு ஏற்படுவதற்கு முன்னதாகவே செய்வதால் சிகையைப்போல் அது நம் கைக்குள் அடங்கினதாயில்லை. ஆகவே அதை ஓர் சின்னமாகக்கொள்ளலாம். எல்லாவற்றையும் விட என் புத்திக்கு ஓர் அடையாளம் புதிதாகத் தோன்றுகிறது. அது என்னவெனில் பெருமாள் கோவில் தேர் திருநாளன்று தேர் இழுக்க வருபவர்களெல்லோரும் ஹிந்துக்களே. பெருமாள் கோவில் என்று கூறியது எதனால் என்றால் சில வீர வைஷ்ணவர்கள் சிவன்கோவில் தேரை இழுக்கப்போக மனமில்லாமலிருக்கலாம். ஆனால் பெருமாள் கோவிலுக்கு யாரும் போவார்கள். பதினெட்டு ஜாதி என்பார்கள். இவர்களனைவரும் ஹிந்து ஆலயங்களில் தேர் இழுக்க வருவார்கள். இவர்கள் எல்லோரும் ஹிந்துக்கள் என்று நான் கூறுகிறேன். இவர்கள் வழிபடும் மதம் ஹிந்துமதம். ஆகவே ஹிந்துக்கள் யார் என்பதற்கு இது ஓர் அடையாளமாக வைத்துக்கொள்ளலாம்.

வேதப் பிரமாணம்.

இன்னும் கொஞ்சம் மேலே செல்வோமாகில், வேதப்பிரமாணப்படி நடப்பவர்கள் ஹிந்துக்கள் எனலாம். வேதம் படிக்கிறதற்கு ஸ்திரீகளுக்கு அதிகாரமில்லை, அவள் என் தாயாராயிருந்தாலும் வேதம் கூறுகிறபடி நடந்தால்தான் மதத்தையொழுகி நடப்பவளாவாள். நம்மில் சாதாரணமாகக்கூட நீ சொல்வது என்ன "வேதவாக்கோ" என்று பேசுவதைக் கேட்டிருப்பீர்கள். இந்த அளவிலேயேனும் நமது வேதம் காக்கப்பட்டுவருகிறதைக் கண்டு நாம் சந்தோஷிக்கவேண்டும். வேத வாக்குக்கு ஒரு மகிமையுண்டு என்பதைச் சாதாரண ஜனங்களும் உணர்ந்திருக்

கிறார்கள். அந்த வேத வாக்கைப் பரிபாலிக்கிறவர்கள்தான் ஹிந்துக்கள். எனக்கு என் தாயார்மீது அதிகப் பிரியமிருக்கலாம். ஆனால் அவளைத் தீண்டக்கூடாத சமயத்தில் அவள்தான் எனக்கு அன்னமளிக்கவேண்டும். அப்பொழுதுதான் நான் அவளிடம் கொண்ட அன்பு வெளியாகும் என்று கூறினால் அது எந்தெந்த சமயத்தில் எதெதைச் செய்வது உசிதமோ அதன்படி நடப்பதே அறிவுடைமையாகும். இவ்வாறு பிடிவாதம் செய்வது எங்ஙனம் ஓர் தாய் நல்லவார்த்தைக் கூறிப் பிரியமானவசனத்தால் மாற்றித் திருத்துவாளோ அதேமாதிரி நமக்கு முரணாயிருப்பவர்களை அன்பைக்கொண்டு தழுவி அவர்களிடம் அன்புகாட்டி நம்வழி திருப்பினால் அதுவே சரியான சாதனமாகும்.

வேதத்தின் காலம்.

வேதம் எப்பொழுது ஏற்பட்டதென்று ஆராய்ந்து பார்த்தால் அதன் கால அளவை நிர்ணயிக்க முடியவில்லை. மற்ற மதத்தின் வாக்குகளை நாம் கீழ்கண்டபடி அதை ஸ்தாபித்தவர் காலத்திலிருந்து ஒருவரையறுத்துவிடலாம். கிறிஸ்து மதம் ஏற்பட்டு இன்றைக்கு 1932-வருஷங்களாகின்றன. கிறுஸ்தவமதத்திற்கு முன் பௌத்த மதம் தோன்றிற்று. அதையும் தாண்டி முன் சென்றால் கிறிஸ்துவ மதத்திற்கு முன்னதாகவும், பௌத்த மதத்திற்கு முன்னதாகவும் பிரபஞ்சத்தில் தோன்றிய ஆன்மாக்கள் சிரேயஸை அதாவது மோக்ஷஸாம்ப்ராஜ்யத்தைப் பெறச் சாதனமில்லாமலே இருந்தார்களா? கிறுஸ்தவமதம் தோன்றிய நாட்டில் யூதர்கள் இருந்தார்கள். இன்னும் கிரேக்க நாடு, ஈஜிப்ட் முதலிய பிரதேசங்களிலும் பெரிய பெரிய நாகரீகம் படைத்த மக்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களும் ஏதோ ஒருவித மதத்தைத் தான் தழுவி வந்தார்கள் என்பது உறுதி. கிரேக்கர் வழக்க பழக்கங்களும் மதசம்ப்ரதாயங்களும் நம்முடைய கோட்பாடுகளையொத்தவையாய் இருக்கின்றன. தவிர இந்தப் பெரிய நாகரீகங்களையும் சரித்திரக்காரர்கள் 5000- ஆண்டுகளுக்கு முன்னதாக தோன்றியவையென ஒரு காலம் குறிப்பிட்டுள்ளார்கள். இவர்கள் கணக்குப்படி இந்த பிரபஞ்சமே 5000, அல்லது 6000-வருங்களுக்கு முன்னதாகத் தோன்றியதென ஏற்படுகிறது. ஆனால் இதற்கு மாறாக இந்த யூதர்கள் வசித்த நாடுகளிலேயும்

சுமத்திரா ஜாவா முதலிய தீபங்கள் தாண்டி ஆஸ்திரேலியா நாட்டிலுள்ள "வர்ஜிங்காடு" என்ற இடத்திலேயும் அகப்பட்ட சில சிலாஸாசனங்களை ஆராய்ந்து பார்த்தால் இன்னும் எவ்வளவோ வருஷங்களுக்கு முன் அவை ஏற்பட்டதாகக் காணப்படுகின்றன தவிர அவை சம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டிருக்கின்றன.

மெக்ஸிகோவில் ராம சீதா உற்சவம்.

இன்னொரு விஷயம். அமெரிக்க நாட்டிலுள்ள மெக்ஸிகோ தேசத்தில் முன்னிருந்த ஜாதியார் பெயர் "ஆஸ்டிக்ஸ்" அதாவது ஆஸ்திகர்கள். அதேமாதிரி பெருவிலிருந்தவர்கள், 'சூரியர்'கள் என்றபொருள்கொண்ட பெயர்படைத்தவராய் இருந்தார்கள் கலிபோர்னியா என்ற நாடும், "கபிலாரண்யம்" என்பதன் மரூஉ, அதன் பக்கத்தில் "ஆஷ்தீவு"— ஹார்ஸ் தீவு அதாவது 'நீறுதீவு' என்றும், குதிரைத் தீவு என்றும் பொருள் படும்படியான தீவுகள் இருக்கின்றன. இவைகள் நமக்கு பகீரதன் கங்கை கொண்டு வந்த கதையை நினைவூட்டும். இன்னும், மெக்ஸிகர் நாட்டில் நடக்கும் ஒரு உற்சவத்திற்கே "ராமசீதா" உற்சவம் என்றுபெயர் வழங்குகிறது. ஆங்கும், மேற்கூறிய இதர பல நாடுகளிலும் உள்ள ஊர்களுக்கும் நம் தேசத்துப் பெயர்களே உள்ளன. அதிலும் முக்கியமாய் ராமநாமமே இருந்துவருவதைக் காண்கிறோம். இவைகளையெல்லாம் கொண்டு இந்தப்பேர்தெரியாத சின்னமிலாத நமதுமதம் இந்தப் பிரபஞ்சம் முழுதுமே ஓர் காலம் பரவியிருந்தது என்று நிரூபிக்கலாம். பின்னால் ஏற்பட்ட மதங்களெல்லாம் அதிலிருந்து தோன்றிய ஓரோர் அம்சங்களை அனுசரித்த சாயைகள்தான். ஓர் பெரிய தீபம் நடுவில் இருக்கிறது. அதுவே நமது மதம். அதைச்சுற்றிலும் ஒருபெரியதிரை போட்டுவிட்டால் திரைக்குப் புறம்பாயிருப்பவர்களுக்கு இருட்டாகவிருக்கும். அவர்கள் இருட்டை நீக்க திரையில் இடை இடையே அழகிய சாளரங்கள் ஏற்படுத்தினால் அந்தச் சாளரத்தின் சாயையாகவே வெளிச்சம் தோன்றும். அவரவர்கள் எந்தச் சாளரத்தின் வழியே நோக்குகின்றனரோ அந்தவாறே வெளிச்சத்தின் உருவம் அவர்களுக்குத் தெரியும். இச்சாளரங்களே, இடையில் ஏற்பட்ட மதங்கள். அவை ஒருவாறு இருட்டிலிருந்தவர்களுக்கு வெளிச்சம் அளித்தன. இந்தத் திரையையே நீக்கிவிட்டால் எல்

லோருக்கும் ஒரே ஜோதி விளங்கிப் பிரகாசிக்கும். அந்த ஜோதி தான் நமது மதம். அதைச் சூழ்ந்துள்ள மாயையும் அஞ்ஞானமும் தான் இந்தத் திறை. இப்பொழுது நமது கடமை இத் திறையையெடுத்து எல்லோருக்கும் ஜோதியின் பிரகாசத்தை யளிப்பதேயாகும்.

சம்ஸ்கிருதம் இறந்துவிட்டதா?

கடைசியாக ஒரு வார்த்தை. சிலர் சம்ஸ்கிருதம் இறந்துவிட்டது என்கிறார்கள். சம்ஸ்கிருத கலாசாலையிலிருந்து கொண்டு பேசுவதால் அதன் நினைவு வந்தது. சம்ஸ்கிருதம் சாகவேயில்லை. இந்தியாவிலுள்ள எல்லா ஸர்வ கலாசாலைகளிலும் அதற்காக ஸ்தானமேற்படுத்தி ஆசிரியர்களை நியமித்து இருக்கிறார்கள். தவிர அது எல்லா பாஷைகளிலும் ஊடுருவிப்பாய்ந்து வருகிறது. இந்தியாவிலுள்ள 100—க்கு 75 பாஷைகள் சம்ஸ்கிருதத்திலிருந்து தோன்றியவை; நமது தமிழ்ப்பாஷையிலும் வடமொழி வெகுவாகக் கலந்துவிட்டது. ஆகவே ஸம்ஸ்கிருதம் சாகவேயில்லை. அது புகழ் உடல்கொண்டு பெருமையடைந்து சகல பாஷைகளினுடைய ஜீவதாதுவாக விளங்கி வருகிறது.

தொகுதி விஷயம்.

தற்காலத்தில் தாழ்ந்தவகுப்பினர் விஷயத்தில், தனித்தொகுதியா? கலப்புத்தொகுதியாவென்பது முக்கியமாக எல்லாரும் கவனிக்கவேண்டியதுண்டு. இதுவரையில், தனித்தொகுதியாக விருந்துகொண்டே ஹிந்துவென்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஆதித் திராவிடர்களுக்குத் தனித்தொகுதி கொடுத்துவிட்டால் ஹிந்துமதத்தினின்றும் அவர்களை மகம்மதியர்களைப்போல் விலக்கிவிட்டதாகக் கருதுவது சரியல்ல. இதனால் ஹிந்துஜனத்தொகை குறைந்துவிடுமோவென்று பயமடைவதும் நியாயமில்லை. கலப்புத்தொகுதியிலுமிவ்விதம் குறைவுகள் ஏற்படக்கூடும் என்பது நிச்சயம். அப்போது அக்குறைவுகளை நீக்குவதற்கு ஏதாவது முயற்சி நாமெடுத்துக் கொள்ளவேண்டியது அவச்யம். அந்த முயற்சியை தனித்தொகுதியாக ஆதித்திராவிட

களை ஒப்புக்கொண்டே எடுத்துக்கொள்ளலாம். இதற்காக கலப்புத்தொகுதியை விரும்புவது வளர்ச்சிபெறாத அறிவின் செயலாகும். கலப்புத்தொகுதியே ஒப்புக்கொண்டாலும் "தீண்டாமை விலக்குக்கும்" "தீண்டாதார் ஆலயப்பிரவேசத்திற்கும்" இடங்கொடுக்கவேண்டுமென்ற அவசியமில்லை. பிராம்மணரும் அப்பிராம்மணரும் கலப்புத்தொகுதிதான். ஆனால் ஒற்றுமையும் உண்டு. வேற்றுமையும் உண்டு. அதுபோல் ஆதித்திராவிடர்களும் கலப்புத்தொகுதியாகவே கருதப்பட்டாலும் தோஷமில்லை. "எல்லோரும் ஓரேமாதிரியாக இருக்கவேண்டும்" என்ற கிளர்ச்சிக்கு அர்த்தமேயில்லை. இது மனிதர்களுக்கு ஒரு அனுகரீகநிலையாகும். அப்படியேகலப்புத்தொகுதியை விரும்புவதும், தனித்தொகுதியை வெறுப்பதும், விபரீதமேயாம்.

——— V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

தீண்டாமை விலக்கு நிதி.

இதற்கு பீடாபுரம் மஹாராஜா 5000 ரூபாய் நன்கொடையளித்தனராம். இது பெருந் தர்மமென்று தற்காலத்தில் கருதப்படுகின்றது. ஐயோ என்ன விபரீதம்! நல்லகாரியத்திற்கு ஒருவரும் உதவிசெய்ய முன் வரவில்லையே? எது நல்லகாரியம். எது கெட்டகாரியமென்பதும் தெரியவில்லையே? கலிகாலப் பிரவாஹத்தால் இழுக்கப்படும் ஹிந்துஜன ஸமூகம் ஹிந்துமகா ஸமுத்திரத்தில் தள்ளப்படுமா? அல்லது உத்தரமகாஸமுத்ரத்தில் தள்ளப்படுமா? என்ற நிலையில்தவித்துக் கொண்டிருக்கின்றதே, இந்நிலைமையில் ஏதாவது உதவியிருந்தாலன்றி நாம் சுகமாக வாழ்வது கஷ்டம். ஆர்யர்களே? மதவிஷயத்தில் உங்கள் பொருளைக் கொடுத்து உதவிபுரியுங்கள்.

——— V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

இப்போது நாம் என்ன செய்யவேண்டும்,

இவ்வுலகத்திலுள்ள எல்லா ஜாதியாரிலும் மதாசாரங்களில் சிறந்தவர்கள் இந்தியர்களே என்பது மறக்கவொண்ணு விஷயம். நமது மதம் இந்தியாவில் மற்றதேசங்கள் அடையமுடியாத அவ்

வளவு அபிவிருத்தியையடைந்தது. இப்பொழுதோ நாளுக்கு நாள் அது மாறிக்கொண்டு துர்பலஸ்திதியில் இருக்கிறது. இதன் சிறப்பை இதுவரையில் நாமறிந்துகொள்ளாமல் பேருறக்கம் பெற்றுவிட்டதால்தான் இப்படிப் பட்ட ஹீநஸ்திதியை அடைந்தோம். எல்லாதேசத்திலுள்ள எல்லா ஜனங்களுமே ஹிந்துமதத்தை எதிர்த்துப் போர்புறிகின்றனர். இப்போது ஒரு சிலரைத் தவிற மற்றெல்லோரும் நமது மதத்திற்கு எதிரிகளேயாவர். நம்மவரோ நமது மதத்தை அழித்துவருகிறார்கள். நமக்குள் காணப்படும் குறைவுகளெவ்வொன்றையும் நமது மதத்தின்மீது சுமத்தி அதைத் தவிர்க்கப் பார்க்கிறார்கள். இக்காலத்தியவரின் முயற்சியெல்லாம் ஹிந்துமதத்தைப் பரிபாலிக்கக் கூடியதாயில்லை. ஆனால் இவர்கள் கைக்கொண்ட முயற்சிகளுக்கு இந்திய ஆசாரங்களையழிக்க ஒருவாறு சக்தியிருந்தாலும், வேறு யாதொரு நூதன ஆசாரங்களை அதன் ஸ்தானத்தில் உண்டுப்பண்ண சக்தியில்லையாதலால் அவைப் பிரயோஜனமற்றவை என்றே கூறலாம். ஹிந்துக்களின் பூண்டே நசித்துவிடும்பக்ஷத்தில் ஒருவேளை அவ்விதமேதாவது நவீனசார சீர்திருத்தம் நடக்கலாமேயொழிய அதன் மத்தியில் ஒருக்காலும் அது பூர்த்தியடைய நேரிடவே மாட்டாதென்பது நிச்சயம். இந்தியா முழுவதுமே முயன்றாலும், அல்லது ஐரோப்பாவும் கலந்துகொண்டு முயன்றாலும் கீழ்நாடு மேனாடாகமாட்டாது.

ஹிந்துக்களின் ஜாதி இறந்துவிடுமா? அது இறந்தால் இது இந்தியாவல்ல. இந்தியாதேசமிறவாமல் ஜீவிக்கும் வரையில் ஹிந்துமதமுமிருந்தேதீரும். இந்தியர்கள் எல்லோரையும் நசிக்கும்படி பண்ண நவீன சீர்திருத்தக்காரர்களின் முயற்சியால் முடியக்கூடுமா? ஆகவே சீர்திருத்தக்காரர்களுக்கு எல்லா காரியத்திலும் மதவிஷயத்தில்போல் அபஜெயந்தான் நேரிடும். ஏனென்றால் இவர்கள் எல்லோரும் நமது தேசத்தின் ஸ்வபாவத்தை அறியாதவர்கள். இவர்களுடைய அறியாத்தன்மையால் இந்தியா பூராவும் பரிதாபநிலைக்கு வந்துவிட்டது. இதுதான் கைகண்ட பலனாகும். நாமிந்தியாவின் ஹீநஸ்திதியைக்கண்டுப் பரிதவித்து வருவதுபோல் இச்சீர்திருத்தக்காரர்களும் நம்முடன் கலந்து கொண்டு பரிதவிப்பதுபோல் பாசாங்குபண்ணுகிறார்கள். இதானது திருடன் ஜனங்களுடன் சேர்ந்துகொண்டுத் திருடனைத்

தேடிக்கொண்டுப் பாசாங்கு செய்வதுபோலிருக்கிலது. இவர்கள் நமது மதமென்னும் ஸொத்தைத்திருடி யபஹரித்ததுமன்னியில் நல்லவனைப்போல் பாசாங்கும் பண்ணுகிறார்கள். இந்தியா நூதன நிலையை யடைந்தால்தான் நன்மை ஏற்படும் என்ற எண்ணம், மதச்சீர்திருத்தத்தால் எப்படி ஸித்திக்குமோ தெறியவில்லை. இதனால் இவர்கள் விரும்புகிற நன்மை வேறு, ஆஸ்திக ஹிந்துக்கள் விரும்புகின்ற நன்மை வேறு. இவ்விரண்டிற்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்யாஸமுண்டு. ஆனாலிச் சீர்திருத்தக்காரர்களிடமும் நாம் நன்றி பாராட்டவேண்டும். ஏனென்றால் "மதவிஷயத்தில் எங்களைப்போல் நீங்களும் சீர்திருத்தம் செய்ய முயல்வீர்களானால் அபஜெயந்தான் அடைவீர்கள்" என்று நமக்கு நற்புத்தி புகட்டி மதநம்பிக்கைத் திடப்படும்படி செய்கிறார்களல்லவா?

இந்தியாவின் நன்மை.

ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொன்று பிரதானமான புருஷார்த்தமாக இருந்து வருகின்றது. இங்கிலாந்து முதலிய தேசங்களில் இராஜதந்திரந்தான் முக்கிய புருஷார்த்தம். இந்தியாவிலோ ஸமயமே முக்கிய புருஷார்த்தம். இதுதான் நமது உயிர் நிலை. இதை எதிர்த்துத் துன்பப்படுத்துவோமானால்நாம்உயிரிழக்கநேரிடுமென்பது நிச்சயம். இதனால் இந்தியாவிற்கு யாதொரு நன்மையும் ஸித்தித்துவிடாது. மதமூலமாகத்தான் இந்தியாவிற்கு எல்லா நன்மைளும் ஏற்படவேண்டும், ஸமய பக்தியையழித்துவிட்டு நமக்கேற்படும் நன்மைக்கும் மிருகங்களின்நன்மைக்கும் வித்யாஸமில்லை. தற்காலத்தியவர்கள் மிருகவர்க்கவாழ்க்கை முறையைத்தான் மனிதவர்க்கத்துக்கு நல்லவாழ்க்கையாகப் பிரசங்கித்து வருகின்றனர், நவீன சீர்திருத்தத்தால் கிடைத்த பயனிதுதான்.

ஆகையால்,இவர்களுடையபிரசார வேலையைத்தடுக்கஒருவருமில்லை. இவர்கள் ஒன்றுமறியாத பாமரஜனங்களைக் கைவசப்படுத்திக்கொண்டுத் தம் கக்ஷியைப் பலப்படுத்திக் கொண்டனர். ஹிந்துமத ரஹஸ்யமுணர்ந்த விவேகிகளுக்குச் சிறிதும் பலமில்லை, துர்பலராய்விட்டார்கள். இதற்கு மதத்தில் வெகுநாளாய் சிரத்தையற்றுவிட்டதே காரணம். இவ்விதம் மதாபிமான மழியும்படி நேரிட்டதற்கும் முடிவில் பகவானுடையப் பிரஸாதம் நம்மிட

மில்லாமலிருப்பதுதான் ஹேது. இப்போது பகவான் இச்சீர் திருத்தக்காரர்கள் பக்கமாகத்தானிருக்கிறார் என்று சொல்ல வேண்டும். அவரை நம் பக்கமாக திருப்புவதற்கு நமக்குச் சக்தி யில்லை. இதுவும் பகவானுடைய திருவிளையாடல் போலும். ஆகை யால் பகவானுடைய பிரஸாதத்தை அடைய ஒவ்வொரு ஆஸ் திகனும் முயலவேண்டும். அவருடைய மதத்தைக் கடைமையாகக் கையாண்டுவரும் நம்மைப் பகவான் முடிவில் கைவிடமாட்டார் என்பது நிச்சயம். எவ்வளவு யோஜித்துப்பார்த்தாலும் இப்போ துள்ள நெருக்கடியான நிலையில் நமக்கு வேறுவழியில்லை.

சுபம்.

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

ஆலயப் பிரவேச விவாதம்.

25—10—32ல் கும்பகோணத்தில் ஸ்ரீ வாணீவிலாஸ ஸபை மண்டபத்தில் ஸ்ரீமான் M. K. வைத்தியனுதய்யர் தலைமையின் கீழ் ராஜகோபாலாச்சார்யருடன் பண்டிதர்கள் கலந்து விவாதிக்க நேரிட்ட விபரம் 27-ம் தேதி மித்திரனில் வெளிவந்துள்ளது. அச் சபையில் இப்போது பல காரியங்களிருக்க இந்த ஆலயப்பிரவேச காரியத்தில் இறங்கக் காரணம் யாதென்று பண்டிதர்கள் கேட்ட தற்கு ராஜகோபாலாச்சார்யார் சொல்வது:—

1. பழையகாலம் போகத் தற்காலம் ஆதித்திராவிடர்கள் ஒவ்வொரு படியிலும் உயர்ந்தேவருகிறார்கள். 2. பொதுஸ்தா னங்களிலும் உத்தியோகங்களிலும் ஸ்தானங்களையடைகிறார்கள். 3. அவர்கள் பல்லாயிர வருடங்களாய் ஆழ்ந்த அந்தகாரத்தில் ஆழ்த் தப்பட்டுகிடக்கிறார்கள். 4. மனிதனுகப் பிறந்த ஒருவனைக் கட வுள் ஸன்னிதானத்தில் விலக்க நியாயமில்லை. 5. கவர்மெண் டார் மத விஷயங்களில் தலையிடலாகாதென்றிருந்தாலும் காலக் கிரமத்தில் அவர்கள் தலையிடுகிறார்கள். 6. பிடிவாதமான தீர்ப்பை வைத்துக்கொண்டு கூறினால் அவர்கள் பிறமதத்தில் பிரவேசித்து விடுவார்கள். 7. ஓர் பெரிய அபாயம் வருகிறதென்பது தெரிந்து தான் தேச மக்களின் நன்மைக்காகவே பாடுபடுகிறேன். 8. மதம் அழிந்து கெட்டுப்போகத் தாம் எதுவும் கூற வரவில்லை. என்று

பிறகு இந்து என்பவன் யார் என்ற விவாதம் நடந்ததாயும் பிறகு பிர்ம்மஸ்ரீ தாத தேசிகதாதாசார்ஸ்வாமி யுக்திவாதம் ஊற்றுக்கு நிற்காது. அது நாசத்தையே கொடுக்கும். அமானுஷ்யமான தர்ம சாஸ்திரங்களை மனிதன் மாற்ற முடியாதென்று முடித்தபோதிலும் நடுவில் சற்று குழப்பம் நேர்ந்ததாகத் தெரிகிறது. ஆகவே இங்கு நான் ஆசார்யரின் கேழ்வைகளைப் பரிசீலனை செய்கிறேன். இப்போது என்னிடத்தில் ராஜகோபாலாச்சார் மனிதர்கள் குழப்பம் செய்யமுடியாது. இனி அவரது கேள்விகளை விசாரிப்பாம்.

வாதத்திற்கு மருந்துண்டு. பிடிவாதத்திற்கு மருந்தில்லை என்பதை யாரும் கவனித்துக்கொள்ளவேண்டும்.

ஆதி திராவிடர்கள் உயர்ந்தேவருகிறார்கள். உயர்ந்த ஸ்தானங்களை அடைந்தே வருகிறார்கள் என்றதை என்ன கருத்துடன் சொல்கிறார். அவர்கள் உயரக்கூடாது. உத்தியோகத்திற்கு வரக்கூடாதென்று ஆங்கில கவர்ண்மெண்டில் எந்த ஆஸ்திகன் தடைசெய்கிறான். பிறகு 3-வது சொல்தான் ஆச்சரியமாய் இருக்கிறது.

பல்லாயிரம் வருடங்களாய் ஆழ்ந்த ஆந்தகாரத்தில் ஆழ்த்தப்பட்டுக்கிடக்கிறார்கள் என்று. யாரால் ஆழ்த்தப்பட்டார்கள். இதற்குக் கூறும் பதிலை அக்கிரமமில்லாமல் தக்க சரித்திர மூலமாகவோ வேறு நம்பத்தகுந்த பிரமாண மூலமாகவோ எடுத்துரைத்தால் யாவரும் நம்பி ஆசார்யரின் ஆழ்ந்த யோசனையோடு கலந்துகொள்வார்கள். பிறகு 4-வது வார்த்தைக்கு இதற்கு முன்னமே பதிற் கூறியிருக்கிறேன்.

கவர்மெண்டார் மத விஷயங்களில் தலையிடுகிறார்களென்கிறார். இது உண்மை. தலையிடுவதில்லையென்று எழுத்துமூலம் பிரதிக்ஞை செய்த அவர்கள் தலையிடும்படி எவ்வப்போது நேர்ந்தது. அதற்குக் காரணம் யார். இந்துமதத்தைத் துலைக்கத் தலைப்பட்ட சீர்திருத்தக்காரர்களும் இப்போதிய காங்கிரஸ்காரர்களும் இந்துமதத்திற்குப் புறம்பான ஆர்ய ஸமாஜிகள் பிரும்ம ஸமாஜிகளாலுந்தான் இவ்வளவு தூரம் கவர்ண்மெண்டார் புகுத்தப்பட்டார்கள்.

6-வதில் நம்மைப் பிடிவாதம் செய்பவர்கள் என்கிறார். இந்த மட்டில் ஒன்று கூறி மேற்செல்வோம். அநாதிகாலமாய் ஏற்பட்ட ஆசாரத்தை விடமுடியாமலிருக்கும் அநேக ஜனங்களை ஒரு

ராஜகோபாலசார்யார் சில முரட்டுப் பிடிவாதங்களை வைத்துக் கொண்டு பிடிவாதமாய் அனுஷ்டித்தில் கூசாமல் தலையிடுகிறார் என்று சொல்வதுபொருந்தாதோ? இருக்கட்டும். நாங்கள்செய்யும் பிடிவாதத்தால் அவர்கள் பிறமதம் புகுந்துவிடுவார்களென்று பரிதபிக்கிறார். இதிலும் ஒன்று கேட்கலாம். கோவிலுக்குள் விடாத ஒரு குற்றத்திற்காக அவர்கள் வேறுமதத்திற்குப் போய் விடுவதென்றிருந்தால் நம் இந்தியாவில் இதுகாறும் ஆதித்திராவிடப்பூண்டே இருந்திராது. இதுவிஷயமாய் ஆசார்யார் கண்ணீரும்விட நேரிட்டிராது. ஆனால் இப்போதும் அவர்கள் தொகையால் 6-கோடி என்று ஆசார்யரே கூறுகின்றனர். ஆதலால் கோவிலுக்குள் விடவில்லையென்ற குற்றமில்லை. இனிமேல் குற்றமென்றும் வைத்துக்கொண்டு பார்ப்போர் இதற்காக அன்னிய மதத்தில் பிரவேசிப்பதென்றால் நமக்கு நஷ்டமுண்டாவதொன்று. அவர்களுக்கு லாபம் கிடைப்பதொன்று. ஆக இரண்டுவேண்டும். நமக்கு நஷ்டமுண்டோவென்று பார்த்தால் ஒரு நஷ்டமும் நமக்கில்லையென்றுதான் தெரிகிறது. இந்துமதத்தில் எண்ணிக்கை குறைவு நமக்குப்பலக்குறையல்லவோ எனில் இல்லைஎன்பார்கள். ஏனெனில்இதை முன்கூறியிருப்பினும் ஈண்டிங்குவிரிக்கின்றேன்' நம் மதம் அனுஷ்டானத்தின் கட்டளையில் நடப்பது. நம்மை மதானுஷ்டானம் செய்யச்சொன்னார். சிரத்தையுடன் கேட்பவர்களுக்கும் யுக்தியாய்க் கேட்பவனுக்கும் தக்கவாறு பதிலுரைக்கச் சொன்னாரே தவிர தன் இச்சைப்படி நடப்பவனையும் மதத்தைத் துலைத்து நாஸ்திகவாதம் பேசுபவனையும் போலியான மத பக்தனையும் அணுகாதே. அவனை ஒன்றிலும் மீண்டும் சேர்க்காதே என்றதனால் இந்துமதச் சொந்தக்காரன் அவன்தான் ஜனப்பெருக்கும் குறைவும் நம்மதத்திற்கு வேண்டியதில்லை. நம் மதத்தைக்காட்டிலும் சிலமதம் ஜனஸங்கியையில் குறைவாய் இருக்கிறது. அதனால் அம்மதம் பிறமதத்தால் அழுத்தப்பட்டதோ இல்லை. அவனவன் க்ஷேமத்தை அடைய அவனவன் கொள்கையை விடலாகாதென்றுகூடத் தெரியாதமனிதனிருப்பது எம்மதத்திலும் சுகமடையாததற்குதான் காரணம்,

இனிப் பிற மதத்தில் சேர்ந்தவர்கள் அங்கு சுகமடைந்து விடுகிறார்களா. நம் ஜில்லாக்களில் அனேக கிராமங்களில் பிற

மதம் புகுந்த ஆதித்திராவிட கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள். அதில் சேர்வதற்கு முன் வைத்திருந்த தொழில் யாது. சேர்ந்தபின் ஏற்பட்டதொழில் யாது? இப்போது என்ன சௌகர்யம் முன்னைக்காட்டிலும் கிடைத்ததென்பதை ஆசார்யரும் நாமும் சேர்ந்துபோய்விசாரிப்போம். அப்போது ஆசார்யருக்குப்புலப்படும். அவர்கள் ஆதித்திராவிட கிறிஸ்தவர்களாயின் இப்போது கிராமாந்தரங்களில் விலகித்தான் நிற்கிறார்கள். இனி ஆசார்யரின் கருணைக்குப் பிறகு எவ்விதமாகப்போகிறதோ. மற்றும் அங்கு கோவிலின் கதியைவிசாரிப்போம். கிரிஸ்தவர்களின் கோயிலில் ஆபீஸில்போல் நாற்காலிகள் உண்டு. அங்கு கடவுளை வணங்கப்போகிற அவர்கள் அந்த நாற்காலியில் உட்காருவார்கள். நம் கோயிலில் விடாத கோபத்தினால் அம் மதத்திற்போய் சேர்ந்ததற்காக உனக்கும் அந்த நாற்காலி உண்டா? இல்லை. இரு காலிதான் நீ அங்கே. கோவிலுக்கெதிரில் வெளியில் முழங்கால்கள் மண்டிபோட்டுத் தொழவேண்டும். நம் மதத்தில் அப்படிக் கூறவில்லை. கிடா கங்காஸ்னானத்திற்குப் போனதாம். அங்கும் ஏரில் கட்டினானும் என்பதுபோல்தான். ஆகவே ஆசார்யார் அவர்கள் புற மதம் போனால் கஷ்டம் அதிகரிக்கும். ஒருக்காலும் குறையாதென்பதை அவர்களுக்கு விளக்கட்டும்.

இனி 6-வதாக அபாயம் வருவதைத் தெரிந்து தேச நன்மைக்குப் பாடுபடுவதாய்க் கூறுகிறார். அவருடைய ஞான திருஷ்டியால் தெரிந்த அபாயம் இன்னதென்பதை விளக்கிச் சொல்லிவிட்டால் ஆசார்யர் தேச நன்மைக்குப் பாடுபடுகிறாரென்று யாவரும் கொண்டாடுவார்கள். அதை வெளியிடலாகாதா?

7-வதில் மதம் அழிந்து கெடடுப்போகத் தாம் எதுவும் கூறவரவில்லை என்கிறார். இதை ஏற்றுக்கொள்ள கஷ்டமாய் இருக்கிறது. உண்மையில் இவருக்கு மதத்தில் சிரத்தை இருக்குமானால் மதானுஷ்டானத்தைநடப்பிவித்து நடத்திக்கொண்டிருக்கும் மடாசார்யர்கள் ஸன்னிதியிற்போய் மதத்திற்கு விரோதமற்ற தேச முன்னேற்றத்தில் பாடுபடுவதுடன் மதப் பாதுகாப்புக்கு யாது செய்யவேண்டுமென்றும் கேட்டிருப்பார். அப்படி அவர்களிருப்பதாக அவரும் அவரது மூல புருஷரும் அவரது ஸகாக்

களும் லக்ஷ்யம் செய்ததாய் இதுகாறும் தெரியவில்லை. ஆகவே அவர் சொல்வது ஊற்றுக்கு நிற்காது.

இனி இதற்குமேல் ஏதாவது பத்திரிகையில் வெளிவந்தால் அப்போது எழுதுவோம். சுபம்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரீ.

இதர மதங்கள்.

(1022-வது பக்கத்தொடர்ச்சி)

தற்காலத்தில் மதங்களின் பெயராலும், அரசாங்கக் கூட்டு சங்கங்களினாலும் சமாதான சங்கம், யுத்த நிறுத்த சங்கம், என்ற பல அமைதியை நோக்கமாகக்கொண்ட ஸ்தாபனங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் ஸமான்ய தர்மத்தையே நிலை நிறுத்துவது ஸாத்யமில்லாமலிருக்கிறது. இச் சந்தர்ப்பத்தில் விசேஷ தர்மங்களின் பெருமையை நிதர்சனமாகக் காட்டக் கூடியவர்களும், அனுஷ்டிப்பவர்களும் உணர்ச்சி பெற போதிக்க வல்லவர்களும் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். இந்நிலையில் பல எதிரிடைச் சங்கங்கள் விசேஷ தர்மங்களை எல்லாவழியாலும் எதிர்த்தும், விபரீதமான வழிகளில் தூற்றியும், சில சங்கங்கள் சொந்த அபிப்பிராயங்களை அனுஸரித்து அர்த்தங்களை திரிபாக மாற்றி பொருள் கூறியும், நன்மையுண்டாக்கும் என்ற தவறான எண்ணத்துடன் பிறருக்குக் கஷ்டங்களை விளைவித்துத் தங்களுக்கும் கஷ்டங்களைத் தேடிக்கொள்ள முற்படுகின்றன. சுயமரியாதைக் கொள்கைகள் தன்னலநோக்கமுடன் ஸனாதன தர்மங்களைத் தூற்றுவதாயும், ஆர்ய ஸமாஜம் ப்ராம்ம ஸமாஜம் இவைகளின் பிரசாரங்கள் சொந்த அபிப்பிராயபேதங்களை அனுஸரித்து ஸனாதன மதத்தின் தர்மங்களை மாற்றுவதாயும் இருந்துவருகின்றன.

சுயமரியாதைச் சங்கங்கள் சமூக நலத்தை நோக்கமாகக் கொண்டு சிறிதளவு தன்னலத்தைத் துறந்திருப்பதாகக் காணப்பட்டாலும் தேசீயநலத்திற்கும் மத தர்மங்களுக்குப் விரோதமாக பிரசாரங்கள் இருந்துவருவதால் திரும்பவும் தன்னலத்திலேயே

அடங்கிவிடுகின்றன- இம்முயற்சிகள் தேசத்திற்கும் மதத்திற்கும் முரண்படுமானால் சமூஹம் உன்னததசையை அடைந்துவிட முடியுமா? என்பதை ஆராயாமலே மூட நம்பிக்கையுடன் விபரீத பிரசாரம் நடைபெறுகிறது. பிறர் சந்தோஷப்பட நாம் சுகமாக வாழவேண்டும் என்ற கொள்கையற்று பிறரை வருத்திச் சுகிக்க வேண்டும் என்றகொள்கை எவ்வளவு குறுகியநோக்கம் படைத்தது என்பதை உலகினர் தீர்மானித்துக்கொள்வார்கள்.

ஆர்ய ஸமாஜம் ப்ராம்மண ஸமாஜம் இவைகளின் சிந்தாந்தங்களில் சில போற்றத்தக்கனவே. ஆயினும் ஆர்யஸமாஜக்கொள்கையானது எல்லா மதத்தினரும் சிரேயஸ் அடையவேண்டும் என்ற நோக்கத்துடன் மதங்களில் உயர்வு தாழ்வு தோன்றுமாறு ஸனாதன மதத்திற்கும் பிற மதங்களுக்கும் விருத்தமான பிரசாரத்தையே ஹிந்துமதத்தின் சார்பாக ஆர்யஸமாஜம் என்றபெயருடன் செய்துவருகிறது. வேதத்தின் விசேஷ தர்மங்களுக்கு உரிமையளிக்கப்பட்டவர்கள், உரிமை அளிக்கப்படாதவர்கள் என்ற பாகுபாடற்று யாவருக்குமே உபநயனம் முதலிய விசேஷ தர்மங்களை விதிக்குமாறுகப் போதித்து உலகினைச் சீர்திருத்துவதாகச் சொல்லிக்கொள்கின்றனர்.

ஹிந்துமதத்திலிருந்து பிற மதங்களைத் தழுவினவர்களில் பலரையும், பிற மதங்களிலிருந்து இம் மதத்திற்கு வர விரும்பும் சிலரையும் ஹிந்துமதத்தினராக மாற்றுகின்றனர். ப்ரம்மசர்ய கிருஹஸ்த, வானப்ரஸ்த, ஸன்யாஸதர்மங்களை விதிகளுக்கு மாறுக அனுஷ்டிக்கச் செய்கின்றனர்.

ப்ரம்மஸமாஜமோ எனில்,பல வேறுபட்ட மதத்தினர்களையும் அந்தந்த மத விதிகளுக்கெவ்வித ரீதியில் ஓர் வகை அனுஷ்டானத்தில் செலுத்துகிறது.

ஆர்ய ஸமாஜ பிரசாரங்கள் சொந்த அபிப்பிராயத்தை அனுஸரித்த சில ஸித்தாந்தங்களுடன் ஸனாதன மதத்திற்கு மாறுன வழிகளைப் பரப்பிவர ப்ரம்ம ஸமாஜத்தின் பிரசாரங்கள் அந்தந்த மதத்தினரை அவர்களது மூல புருஷர்களால் போதிக்கப்பட்ட மார்க்கங்களை அப்படியே அனுஷ்டிக்க வழிகாட்டாது மதங்களுக்குள் ஸாங்கர்யத்தைச் செய்து மதங்களின் தெய்வீக மூல புருஷர்களது புனிதமான அபிப்பிராயத்திற்கும் வரையறை

களுக்கும் மாறுபாடான அனுஷ்டானங்களிலும் ஈடுபடச் செய்கின்றன.

ஸனாதன மதரீதியில் எம்மதத்தினராயினும் அவரவரது மத தர்மங்களையே சிரத்தையுடன் அனுஷ்டிக்க வேண்டுமென்றும், பிற மதானுஷ்டானங்களை எக்காரணத்தாலும் அனுஷ்டித்தல் கூடாதென்றும் கூறுவோம். ஒரு மதத்தினரை வேறுமதத்திற்கு மாற்றுவதென்பதும் கூடாதவிஷயம். அவ்வாறே ஒருமதத்தினர் பிறிதோர் மதத்தில் சேர முயற்சிப்பதும் தகுதியற்றதாகும்.

ஒரு மதத்தில் கூறப்பட்டுள்ள ஸகல தர்மங்களையும் மத விதிகளுக்கு முரண்பாடின்றி பூர்ண நம்பிக்கையுடன் அனுஷ்டித்து, பிறகு இவை யாவும் நன்மைக்கான மார்க்கமல்லவென்று சந்தேகமற அனுபவத்தில் தெளிந்தாலல்லது, பிறமதத்திற்குப் போக வேண்டிய அவசியம் ஏற்படுவது ஏன்? தற்காலம் மதம் மாறுகிறவர்கள் அல்லது மதமாற்ற பிரசாரம் செய்கிறவர்கள் இந்த பரீக்ஷையை செய்து தெளிந்தார்களா? ஓர் மதத்தின் அனுஷ்டானங்களைப் பூர்ண திருப்தியுடன் அனுஷ்டிக்க வலுவில்லாத, ஆற்றல் படைக்காத உறுதியற்ற ஒருவர் பிறமதத்தை அடைந்து யாது செய்துவிடப் போகிறார் என்று வினவுகிறோம். மேலும் ஒரு மதத்திலிருந்து வேறுமதத்திற்குப் போவோர் தங்கள் மதத்தில் பல கெடுதிகள் நிறைந்திருப்பதாக அனுபவித்து வெறுப்பினால் மற்ற மதத்தை தழுவுகிறார்களா என்று அறிய விரும்புகிறோம். மதத்திற்கு மதம் மாறிக்கொண்டிருப்பவர்கள் ஒரு மதத்திலிருந்தும் உண்மையை அறியமுடியாதவர்களாக ஆவதுமன்றி, அவர்களுடைய சாதன முறைகளும் நிரந்தரமானதாக இருக்கவில்லை. நிற்க இக்காலத்தில் மதம் மாறுகிறவர்கள் அல்லது மாற்றப்படுகிறவர்களில் சிலரைத்தவிர பெரும்பாலோர், பொருள் பேர் போன்ற ஐஹிகமான தன்னல நோக்கமின்றி பரிசுத்த மனத்தினால் பாரமார்த்திக உயர்வை லக்ஷ்யமாகக் கொண்டு, பிற மதத்தைத் தழுவுகிறார்களா என்பதும் யோசிக்க வேண்டிய விஷயம்.

மதம் என்ற கட்டின்றி அலங்கோலமாகத் திரியும் நாகரீக மற்ற மானிடர்களை ஒரு மதத்தில் சேர்த்துஉபகரிக்கும் நோக்கத்துடன், கடவுள் அருள்பெற்ற மஹா புருஷர்களால், குறிப்பிட்ட

மதம் ஒன்றும் இல்லாதவர்களிடம், 'மதத்தைப் பறப்பல்' என்ற பிரசாரமானது நிறுவப்பட்டிருக்க, அதே கொள்கையுடன் தற்காலம் மதமாற்றம் நடந்துவருகிறதா? சில தனி நபர்களது மத மாற்றம் தவிர மற்றவையெல்லாம், அதிகமான மனிதர்களை ஓர் மதத்தில் குவிக்கவேண்டும் என்ற எண்ணத்துடனேயே செய்யப் படுகிறது. மேலும் ஒரு மதத்தை புனிதமாகக் கருதுகிறவர்கள் பிற மதங்களும் புனிதமானவைகள்தான் என்பதை ஏன் அறிய வில்லையோ!

ஒருக்கால் பரிசுத்தமான நோக்கமுடன் மதமாற்ற பிரசாரம் நடைபெறுவதாக வைத்துக் கொண்டாலும், விரும்பத்தகாத பலன்களே அனுபவத்தில் ஏற்படுகின்றன.

ஹிந்துக்களை மஹம்மதியமதத்தில் மாற்றுவதாலும், மஹம்மதியர்களை ஹிந்துக்களாகச் செய்வதாலும், இவ்வாறே ஓர் மதத்தினரை மற்ற மதத்தில் சேர்க்க செய்யப்படும் முயற்சிகளாலும், மதங்களுக்குள் பிளவும் மனக்கசப்பும் வளர்கின்றன. புனித நோக்கத்துடன் செய்யப்படுவதாக சொல்லப்படும் இக்காரியங்கள் ஒவ்வொரு சமயங்களில் பெரிய கலகங்களையும் உயிர் சேதங்களையும் விளைவிக்கின்றன. இத்தகைய காரணங்களால், தனி நபர்கள் பூர்ண திருப்தியுடன் வேறுமதத்தில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாய் அனுமதிக்கத் தக்கதாய் வைத்துக்கொண்டாலும், கட்டுப்பாடான முறையில் நடைபெறும் மதமாற்ற பிரசாரங்கள் சம்பந்தப்படும் தனி நபர்களுக்கு மாத்திரமல்லாது மானிட சமூஹத்தின் முன்னேற்றத்திற்கே நஷ்டத்தை விளைவிக்கின்றன.

இது இங்ஙனமாக, பொதுவுடமைக் கொள்கையை நிலை நாட்டியுள்ள ருஷ்யதேசத்தில் மதங்களுக்கு விரோதமான பிரசாரங்கள் நடைபெறுவதன்றி. மதம் என்ற பெயரே எடுபடும்படி முயற்சிக்கப்படுகிறது. ஸ்வபாவமாக அபிவிர்த்தி அடைய வேண்டிய அன்பு, அமைதி இவைகளுக்கு ஊற்று நிலையாகிய மதத்தை ஒதுக்கிச்செய்யப்படும் கார்யங்களால் உண்மையான சந்துஷ்டி நாட்டில் ஏற்படுமென்று சொல்லமுடியாது. தங்கள் தேசம் சம்பந்தப்பட்டவரை பல அபிவிருத்தி முறைகளை உபயோகத்திற்கு கொண்டுவந்திருந்தபோதிலும், மானிட சமூஹத்தின் க்ஷேமத்திற்கு அஸ்திவாரமாகிய மதத்தை அலக்ஷியமாகக்

கருதப்படும் நிலையில் அவைகள் நீடித்த நன்மையைக் கொடுக்க மாட்டாதென்பது நிச்சயம்.

ஆகையால் செயல்களுக்கேற்ற பயன் கிட்டுவதுபோல் பூர்வ கர்மாக்களுக்கேற்ப ஒவ்வொரு மதத்தில் ஒவ்வொருவருக்குப் பிறவி ஏற்பட்டிருப்பதால் அவரவரது பூர்விக தேவஸான்னித்யம் பெற்ற மதாசார்யர்களால் கட்டளையிடப்பட்ட தர்மங்களை நன்ருக அனுஷ்டித்து ஜீவர்கள் மேன்மை அடையவேண்டியது என்பது நமது சாஸ்திரங்களின் அபிப்ராயம் எல்லா மதங்களும் ஸமானமாதலாலும் உயர்வு தாழ்வு இல்லையாதலாலும் அதனதன் நிலையில் ஒவ்வொரு மதமும் உயர்ந்ததாதலாலும் எல்லா மதங்களும் தெய்வீக புருஷர்களால் நிறுத்தப்பட்டிருத்தலாலும் எல்லா மதத்தினரும் அவரவர்களது மத தர்மங்களை சிறப்புறச்செய்து பாரமார்த்திக மேன்மையை அடைய முற்படவேண்டும்.

மனுஸ்மிருதி அத்தியாயம் (2)

சில வசனங்கள்

1. சிஷ்யன் குருகுலத்திலேயே வாழ்நாள் முழுவதும் இருக்க விரும்பினால் சரீரம் போகும்வரை ச்ரத்தையோடு குரு சுச்ருஷை செய்யவேண்டும்.

2. சரீரம் போகும்வரை குருவுக்கு உபசாரம் செய்யும் பிராமணன் இலகுவாய் சாச்வதத்தான பிரமபதத்தை அடைவான்.

3. தர்மம் தெரிந்த பிராம்மணன் தன் படிப்பு முடியுமுன் குருவுக்குத் தக்ஷிணை கொடுக்கக்கூடாது. ஆனால் குரு அனுமதி கொடுத்துப் படிப்பு முடிவதற்கு முந்திப் போகிறவன் சக்திக்குத் தக்கபடி குருதக்ஷிணை கொடுக்கவேண்டும்.

4. நிலம், தங்கம், பசு, குதிரை, குடை, பாதரக்ஷை, ஆஸநம், தான்யம், காய்கறி இவைகளில் எது ஸாத்யமோ அதைக் கொடுத்து குருவை பூஜிக்கவேண்டும்.

5. நைஷ்டிக பிரம்மசாரி ஆசார்யன் காலஞ்சென்றபிறகு வித்யை முதலிய குணம்பொருந்திய அவர் புத்திரனிடத்தில் அப்

படிப்பட்ட குமாரன் இல்லாதபோனுல் குரு பத்னியினிடத்தில் அவளில்லாவிடில் குரு தகப்பனுடன் பிறந்தவனிடத்தில் குருவுக்குப்போல் உபசாரம் செய்யவேண்டும்.

6. இவர்களில் ஒருவரும் இல்லாவிடில் குரு ஸ்தாநத்தில் அக்னி முன்பாக நின்றோ, உட்கார்ந்தோ விதி விதிப்படி ஸமித், ஹோமம் செய்து தன் ஆத்மாவை பிரம்மத்தையடைய யோக்யமாகச் செய்யவேண்டும்.

7. குறைவன்னியில் மேற்சொல்லிய நியமப்படி யாவஜ்ஜீவம் காலம் கழிக்கும் பிராம்மணன் இறந்தபிறகு உயர்ந்த பதவியை அடைகிருன். அவனுக்குப் புனர் ஜன்மம் கிடையாது.

(அத்தியாயம் 3.)

8. குருவிடத்தில் மூன்று வேதங்களையும் ஓதும் நியமம் 36 வருஷகாலமுள்ளது. அல்லது அதற்ருக் காலம் 18-வருஷம். அல்லது 9-வருஷம் அல்லது படிப்பு நன்ருய் முடியும்வரை.

9. வேதங்களில் கிரமப்படி மூன்ருே, இரண்டோ, அல்லது ஒன்ருவது நியமத்தோடு அத்யயனம் செய்பவன் கிரஹஸ்தாச்ரமம் வரவேண்டும்.

10. பிரம்மசரிய நியமத்தில் பெயரடைந்தும் தகப்பனிடத்தில் அத்யயனம் செய்துமிருக்கிற பிரம்மசாரிக்கு மாலைபோட்டு உயர்ந்த ஆஸனத்தில் உட்காரவைத்துத் தகப்பன் விவாகத்துக்கு முந்தி கோதான மதுபர்க்கம் கொடுத்து உபசரிக்கவேண்டும்.

R. ஸ்வாமிநாதய்யர்.

குருவாயூர் கோவில் காந்திஜீயின் எச்சரிக்கை.

கள்ளிக்கோட்டை ஜாமொரினுக்கு சில தினங்களுக்கு முன் காந்திஜீ ஒரு கடிதம் எழுதியிருக்கிருர். குருவாயூர் ஆலயத்தில் அவர்ணிகள் ப்ரவேசிக்க சாஸ்திரத்தினுலோ வேருவிதமாகவோ இருக்கும் தடைகளை ஜாமெரின் சீக்கிரம் நிவர்த்திக்கவேண்டுமென்று காந்திஜீ வேண்டுகிருர். ஏற்கனவே கேளப்பன் பட்டினி கிடந்ததை நிறுத்தின பொறுப்பைத்தான் ஏற்றிருப்பதால் கொஞ்சகாலத்தில் அவர்ணிகள் கோவில் நுழையும்படி சமாஸம்

ஏற்படாமல் மறுபடியும் கேளப்பன் பட்டினிகிடப்பதானல் தானும் சேரும்படியிருக்கும், என்று ஸூசனைசெய்திருக்கிறார்.

காந்திஜீ உச்சரிப்பதும் உத்தேசிப்பதுமான காரியம் நியாய மில்லை. குருவாயூர் கோவில் ஹிந்துப் பொதுக்கோவில் அல்ல, அது ஒரு சிலரின் உடைமை என்று சொல்லுகிறார்கள். விசாரணை பண்ணி பூர்வோத்தரங்களை பராமர்சித்து அந்த விஷயத்தை நிர்ணயிக்கவேண்டும். அப்படிச் செய்யாமல் அது பொதுக்கோவில் ஆகையால் அவர்ணிகள் நுழையப் பாத்யம் உண்டு என்று ஸ்வதஸ்ஸித்தம்போல் வைத்துக்கொண்டு நிர்ப்பந்திக்கும் வழிகளில் இறங்குவது சரியல்ல.

ஸ்ரீ குருவாயூர் மூர்த்தியிடம் பக்திவைத்து ஸித்திபெற்றவர் ஸ்ரீநாராயணர் என்று ஒருவர் இருந்தார். அவர் "தந்த்ரஸமுச்சயம்" என்று ஒருவர் கிரந்தம் எழுதியிருக்கிறார். அதில் 9-வது அத்யாயம் 2-வது ச்லோகத்தில் இன்னின்னார்கள் ஆலயத்தில் நுழைந்துவிட்டால் இன்னவிதமாய் சுத்திசெய்யவேண்டுமென்று காட்டியிருக்கிறார். அதன்படி அவர்ணிகளின் ப்ரவேசம் மூர்த்திக்கு அசுத்தி உண்டுபண்ணுகிறது. இந்த சாஸ்திரக் கொள்கையில் அந்தக் கோவிலில் பற்றுள்ள ஸவர்ணிகளுக்கு நம்பிக்கை இருக்கிறது. இதற்கு ஒரு பரிகாரம் செய்யாமல் கேளப்பன் பட்டினி ஆரம்பித்தால் நானும் சேருவேன் என்று காந்திஜீ சொல்வது நியாயமாகாது. என் அபிமதத்திற்கு விரோதமாயிருப்பதை பட்டினிகிடந்துபிடிவாதம் பண்ணி நீக்குவேன் என்று ஒருவர்பிரவிருத்தித்திருப்பதை ஆஸ்திகர்கள் ஒப்பவும் மெச்சவும் முடியாது.

பகவான் பக்திக்குத் தான் கட்டுப்படுவார்.

இம்மகுடத்தோடு ராஜகோபாலாசாரியார் மறுபடியும் பாட்டுப்படிக்கிறார். இவர் பிடிவாதத்திற்கு மருந்துகொடுக்க யாராலியலும். வார்த்தையும் செய்கையும் முன்பின் விரோதமாகவே இருக்கிறது. இவர் 21-10-32-ல் மித்ரனில் எழுதுவதாவது— நம்முடைய தேசத்தில் ஹிந்துமதத்தைச் சேர்ந்தவர்களுக்குள் அனேக ஜாதிகள் உண்டு. ஒரு ஜாதியார் மற்ற ஜாதியாருடன் சமபந்திபோஜனம் செய்வது கிடையாது. 2. ஜாதிவிட்டு ஜாதி விவாகம் செய்வது கிடையாது. இதையெல்லாம் மாற்றிவிடும்

படி நாலுவது மகாத்மாவரவது கேட்கவில்லை என்கிறார். இது புதிதான வார்த்தை அல்லவா? ஆசார்யார் இப்பக்கம் வந்திருந்தகாலத்தில் தீண்டாமை விலக்கல் ஸமபந்திபோஜனம் விவாகம் இம்மூன்றையும் வற்புறுத்தியதையும் அவ்விதம் சேர்ந்துண்ணல் பலவிடங்களில் நடப்பதையும் யாவருமறியலாம். ஆனால் ஆசார்யார் சேர்ந்து சாப்பிட்டதாய் நான் பத்திரிகை மூலம்படித்ததாய் ஞாபகமில்லை. இன்னொன்று மட்டிலும் ஞாபகத்திற்கு வருகிறது. சின்னாட்களுக்கு முன் தமது புத்திரி 19-வயதுள்ள லக்ஷ்மிகாந்தியின் பிள்ளையை மணப்பதாய் முயன்றதில் இருவரின் தகப்பனார்களால் விவாகம் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பினும் விவாகத்தை நடத்திக்கொள்ளாமல் அதிகவற்புறுத்தலேற்படவே அதற்காக அவரும் ஜெயிலில் மாட்டிக்கொண்டதாய் பேபரில் பார்த்ததாய் ஞாபகமிருக்கலாம். இப்படிப்பட்ட இவர் ஒரு ஜாதியிலிருந்து மற்றொரு ஜாதி சம்பந்தத்தை நான் சொல்லவில்லை என்கிறார். ஆனால் என்மனதின் இஷ்டத்தை இன்னொருவரும் அனுஷ்டிக்கும்படி வற்புறுத்தவில்லையெனலாம். இது நிலைநிற்காது ஜனங்களைப் பார்த்து நீங்கள் தலைமுறைக்கிரமமாய் இருக்கிற ஆசாரத்தை மாற்றவேண்டாம் என்றால் அதை மீறின தாங்கள் இதை எங்களுக்கு உபதேசம் செய்யலாமோவென்று கேட்டால் பதிற் கூறவேண்டாமா? அதற்குக் காரணம் கூறவேண்டாமோ; ஒரு சமயம் காந்தி சென்னையில் கலாசாலை மாணவர்களைப் பார்த்து நீங்கள் எல்லோரும் விதவைகளைத் தான் விவாகம் செய்கிறது என்று சபதம் செய்துகொண்டால் தான் இந்தியாவைக் காப்பாற்றமுடியும் என்று அரிய உபதேசம் செய்ததும் பிராமணரல்லாதார் ஒருவர் விதவைகள் கிடைக்காவிடில் யாது செய்கிறதென்று கேட்டதற்கு எல்லோரும் பிராமணவிதவைகள் கிடைக்கவேண்டுமென்று எதிர்பார்க்கக் கூடாதென்று பதிலளித்ததாய் ஞாபகம். ஆகவே காந்தியும் கூறவில்லையென்பதும் அழகல்ல. இதிருக்கட்டும். ஆதித்திராவிடர்களைக்கோயிலில் விடவேண்டுமென்று சொன்னதையே சொல்கிறார். அதற்கு ஆஸ்திகர்கள் கூறும்பதிலைக் கேழ்கிறதில்லை. ஏதோ அவர்கள் அழகாயும் அனுசாரமாயும் இருப்பதால் தான் அவர்களை விடுவதில்லையாம். கோவிலுக்குள் வர அவர்கள் அனுசாரத்தை விட்டுவார்களாம். அழுக்கும் அனுசாரமும் இருப்பதுகாரணம் என்று இவருக்கு யார் சொன்னது. இதைக்

கவனிக்கட்டும் நம் தேசத்தில் நாடார் ஜாதி மதுரை ராமனாதபுரம் ஜில்லாக்களில் விசேஷமாய் செல்வவான்களாயும் வியாபாரத்தில் பெருமைப் பெற்றவர்களாயுமிருக்கிறார்கள். அவர்களுக்கு நாளது வரை ஆலயப்ரவேசமில்லை. அவர்கள் அழகாயும் அனாசாரமாயும் இருக்கிறார்களா? அவர்களுள் அனேகரைப் பார்த்தால் பரமசாம்பவர்களாய் காணப்படுகிறார்கள். உத்தம சைவர்களான அவர்களை விடாத காரணத்தை ஆசார்யார் ஊன்றிப் பார்த்தால் இது எதனால் ஏற்பட்டிருக்கிறதென்று தெரியவரும். இதெல்லாம் அனாதியாய் ஏற்பட்ட ஜாதியின் வரம்பென்று தெரிந்துகொள்ள வேண்டும்.

பக்தியால்தான் பகவான் கட்டுப்பட்டவர் என்று தெரிந்து கொண்ட ஆசார்யர் பக்தியின் ஸ்வரூபம் தெரிந்தவரா? பக்தி எத்தனைவிதம் பக்தி என்று சொல்லிவிட்டால் பக்தியாய் விடுமா. இந்த பக்திக்கு பகவான் கட்டுப்பட்டு விடுவாரா. மந்திரம் தைவத்தைக் கட்டாதா அப்டியாயின் दैवधीनं जगत्सर्वं मन्त्राधीनं तु दैवतं தைவத்திற்குக் கட்டுப்பட்டதுஉலகம். தைவம்மந்த்ரத்தில் கட்டுப்பட்டதென்ற பரமாத்மா சொன்ன வசனத்தை நம்பமாட்டாரா. மந்திரத்திற்கு தைவம் வசப்படுவதுதான் இந்துமதம். மந்திரமில்லாததைவமில்லை. மற்ற மதஸ்தர்போல்நினைத்தவிடத்தில் கோவில் கட்டுவதும் அதை வேறுவிதத்திற்கு உபயோகப்படுத்துவதும் வழக்கமில்லை. சமயகுரவர் நால்வரும் மற்ற பக்தர்களும் அவர்களுக்கு முன்காலத்திலேற்பட்ட பழமை ஸ்தலங்களைத் தான்பாடினார் அவர்கள் பாடல்பெற்ற க்ஷேத்திரத்தில்தான் மகிமை அதிகமென்று பின்னவர் கொண்டாடலாயினர்.

இனி எந்த பக்திக்கும் கட்டுப்படுவாரென்றால் ஆசாரியரின் பக்தியினால் பகவனைக்கட்டி அந்த பகவானிடத்தில் நம் ஆதித்ராவிட சகோதரர்களைக்கொண்டுபோய் நிறுத்தலாகாதா. மந்திரக் கட்டில் பாம்புபோல் அகப்பட்ட தைவத்தினிடத்தில் இவ்வளவு பிடிவாதம் எதற்காக. ஆசாரியாரது பக்திக்குக் கட்டுப்பட்ட தைவத்தை பரமதயாளுவை அவரும் அவரைச் சார்ந்தவர்களும் பங்கிட்டுக் கொள்ளட்டுமே. (தொடரும்)

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

॥ श्री जगदाचार्यपञ्चकम् ॥

सर्वाभीष्टानि कुर्वन् स्वयमिह भुवने सञ्चरन्नागमोक्तं
धर्मं सर्वं च शर्मप्रदमखिलनृणां दर्शयन्नादरेण ।
सौधामाधुर्यलज्जाकरवरवचसा बोधयन् तत्त्वमर्थं
चित्तं जेजीयते श्रीभुवनगुरुमहाकल्पवृक्षोऽसदृक्षः ॥१॥

भोग्यं लोकौघजन्मान्तरकृतसुकृतव्रातजातं वरिष्ठं
भाग्यं शास्त्रीयधर्मव्रजभवदतुलग्लानिशोचद्बुधानाम् ।
मृग्यं संसारदुःखापनयननिरतैस्सादरं सज्जनैश्च
योग्यं रक्षाविधेस्तं भुवनगुरुमहं नौमि नित्यं शिवांशम् ॥

निन्दाहीनचरित्रलोकसुलभं वन्दारुवृन्दोज्ज्वलं
भिन्दानं स्मृतमात्रतोऽखिलतमोवृन्दान्यमन्दोद्यमम् ।
कुन्दाभासमभूतिभूषिततनुं स्कन्दातिभक्त्या सदाऽ
स्पन्दात्मीयहृदा जगद्गुरुमहं विन्दामि योगादरम् ॥३॥

हार्दध्वान्तनभोमणिं जनमनःपेटीविराजन्मणिं
पापध्वंसकरं मणिं विबुधसद्वंशस्य मुक्तामणिम् ।
योगिव्रातशिरोमणिं निजपदं प्राप्तस्य चिन्तामणिं
लोकाचार्यमहामणिं हृदि दधे भूलोकभूषामणिम् ॥४॥

वीक्षामात्रसुदूरधावितभवो दाक्षायणीकामुक -
त्र्यक्षाराधनतत्परो जितसमस्ताक्षावलिश्शंकरः ।
द्राक्षाशिक्षणदक्षवाक् सततसद्रक्षाविधौ दीक्षितः
रक्षां लोकगुरुस्तनोतु सुयशःप्रक्षालिताशो मम ॥५॥

पञ्चापगेशनाम्ना पञ्चकमेतज्जगद्गुरोर्विषये ।
कृतमभिमतफलमखिलं घटयेत् पठतां हठाद्धिलोकानाम् ॥६॥